TNPTF

பதிவு எண்.60/2009

# தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

மாநில அமைப்பு

மாநில அலுவலகம்: 41, முக்தாருன்னிசா பேகம் தெரு, எல்லீஸ் சாலை, சென்னை – 600 002

TAMIL NADU PRIMARY SCHOOL TEACHERS' FEDERATION

Office : 41, Muktharunnisha Begum Street, Ellis Road, Chennai - 600 002, Ph:044-48581553 Email : tnptfithal@gmail.com

மு.மணிமேகலை
மாநிலத்தலைவர்
74020 32686

ச.மயில்
பொதுச்செயலாளர்
94428 13953

J.மத்தேயு
மாநிலப் பொருளாளர்
94447 31747

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர்,
தொடக்கக் கல்வி இயக்குநரகம்,
கல்லூரிச் சாலை,
சென்னை – 620 006.

மதிப்புமிகு ஐயா,

பொருள்: தொடக்கக் கல்வி – 2022-23ஆம் கல்வியாண்டிற்கான ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு – செயல்முறை ஆணை வெளியீடு – ஆசிரியர் நலன் சார்ந்த கோரிக்கைகள் சமர்ப்பித்தல் – சார்பு.

பார்வை : தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்:21243/இ3/இ1/2023 நாள்:26.04.2023.

பார்வையில் காணும் செயல்முறை ஆணையின்படி பள்ளிக்கல்வி மற்றும் தொடக்கக் கல்வித் துறை ஆசிரியர்களுக்கான 2022-23ஆம் ஆண்டிற்கான பொதுமாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வினை கல்வி தகவல் மேலாண்மை முறைமை (EMIS) இணையதளம் வாயிலாக நடத்திட வழிகாட்டுதல்கள் மற்றும் அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. பார்வையில் கண்ட செல்முறைகள் தொடர்பாக ஆசிரியர்களின் நலன் சார்ந்த கீழ்க்கண்ட கோரிக்கைகளை தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில அமைப்பின் சார்பில் தங்களின் மேலான கவனத்திற்குக் கனிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

***<u>கோரிக்கைகள்:</u>***

1. பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வு தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பை எதிர்நோக்கி பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்விற்கான கலந்தாய்வு அறிவிக்கப் படவில்லை எனத் தெரிகிறது. அதே நேரத்தில் பட்டதாரி ஆசிரியர் மாறுதல் கலந்தாய்வு அறிவிக்கப் பட்டுள்ளது. இதில் ஒன்றியத்திற்குள் மாறுதல் கலந்தாய்வு நடத்துவதில் எவ்விதப் பிரச்சனையும் இல்லை. ஆனால், ஒன்றியம் விட்டு ஒன்றியம் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் மாறுதல் கலந்தாய்வு நடத்தினால் அந்தந்த ஒன்றியத்தில் பல ஆண்டுகாலம் பதவி உயர்வுக்குத் தகுதிபெற்று பதவி உயர்வை எதிர் நோக்கிக் காத்திருப்பவர்களுக்குபதவி உயர்வுக்கான வாய்ப்பு இல்லாமல் போய்விடும். பிற ஒன்றியங்களிலிருந்தும், பிற மாவட்டங்களிலிருந்தும் மாறுதல் மூலம் பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடங்களில் பணியில் சேரும் நிலை உருவாகும். எனவே, பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்குத் தகுதி பெற்றுள்ள ஆரம்பப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் இடைநிலை ஆசிரியர்களின் நலன் கருதி ஒன்றியம் விட்டு ஒன்றியம் மற்றும் மாவட்டம் விட்டு மாவட்டம் நடைபெறுவதாக அறிவிக்கப் பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர் மாறுதல் கலந்தாய்வை நிறுத்தி வைத்து உத்தரவிட வேண்டுமாய்த் தங்களைக் கனிவுடன் வேண்டுகிறோம்.

2. கலந்தாய்வு அட்டவணையில் கடந்த 2021-22ஆம் கல்வியாண்டில் பணிநிரவல் மூலம் வேறு ஒன்றியங்களில் பணியாற்றும் இடைநிலை ஆசிரியர்கள் தாய் ஒன்றியத்தில் உள்ள காலிப் பணியிடத்திற்கு மீளத் திரும்புவதற்கான கலந்தாய்வுத் தேதி 11.05.2023 என்றும், இந்த ஆண்டு (2022-2023) இடைநிலை ஆசிரியர் பதவியில் உபரி ஆசிரியர்களுக்கான ஒன்றியத்திற்குள் பணிநிரவல் கலந்தாய்வுத் தேதி 16.05.2023 என்றும், ஒன்றியம் விட்டு ஒன்றியம் கலந்தாய்வுத் தேதி 17.05.2023 என்றும், தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பதவி உயர்வு கலந்தாய்வுத் தேதி 22.05.2023 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பல ஒன்றியங்களில் இருந்த இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்கள் ஏற்கனவே நிர்வாக மாறுதல் மூலம் நிரப்பப் பட்டுள்ள நிலையில் தற்போது பெரும்பாலும் காலிப் பணியிடங்கள் இல்லாத நிலையே உள்ளது. எனவே, ஆரம்பப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வு கலந்தாய்வு முடிந்த பின்பே இடைநிலை ஆசிரியர் காலிப்பணியிடங்கள் உருவாகும். அப்பணியிடங்களில் வேறு ஒன்றிய ஒன்றியங்களுக்கு உபரிப் பணியிட மாறுதலில் சென்றவர்கள் மீள வருவதற்கும், இதே ஒன்றியத்தில் உபரியாக உள்ள ஆசிரியர்கள் இதே ஒன்றியத்தில் தங்கள் பணியைத் தொடர்வதற்கும் வாய்ப்பு ஏற்படும். எனவே, உபரி ஆசிரியர்களின் நலன் கருதி இந்த வாய்ப்பை உருவாக்கித் தருமாறு தங்களைக் கனிவுடன் வேண்டுகிறோம்.

3. செயல்முறை ஆணையில் கூடுதல் தேவையுள்ள காலிப் பணியிடங்களில் (Needy Post) பணிநிரவல் மட்டும் அனுமதிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டும் இதே நடைமுறை பின்பற்றப் பட்டதால் உபரிப் பணியிட மாறுதல் செய்யப்பட்டது போக மீதமுள்ள கூடுதல் தேவைப் பணியிடங்களை நிரப்ப இயலாத நிலை ஏற்பட்டது. எனவே, கூடுதல் தேவைப் பணியிடங்கள் உள்ள பள்ளிகளின் மாணவர்கள் நலன்கருதி கூடுதல் தேவைப் பணியிடங்களுக்கு பணியிடங்கள் அனுமதித்து அந்த இடங்களை ஆசிரியர்கள் பணிமாறுதல் மற்றும் ஆசிரியர் நியமனம் மூலம் நிரப்பிடத் தங்களைக் கனிவுடன் வேண்டுகிறோம்.

4. 01.01.2023 நிலவரப்படி நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆரம்பப் பள்ளித் தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்குத் தகுதியான தேர்ந்தோர் பட்டியல் தயாரிப்பது தொடர்பான தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்:6413/டி1/2023 நாள்:19.04.2023ல் வரிசை எண்:4ல் “31.12.2022க்குள் துறை அனுமதி பெற்று தேர்ச்சிபெற்ற உயர்கல்வி விபரத்தினை சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலருக்கு விண்ணப்பித்து அதற்கான உரிய பதிவுகள் பணிப்பதிவேட்டில் பதிவு செய்திருந்தால் மட்டுமே 01.01.2023 தேதிய தேர்ந்தோர் பட்டியலில் சேர்க்க வேண்டும்” என்று குறிப்பிடப் பட்டுள்ளது. மேற்கண்ட பத்தி 2022ஆம் ஆண்டில் உயர்கல்வித் தகுதி பெற்றவர்களை தேர்ந்தோர் பட்டியலில் சேர்ப்பதற்கான வழிகாட்டுதல் ஆகும். ஆனால், பல மாவட்டங்களில் பல்வேறு ஒன்றியங்களில் கடந்த 10,15 ஆண்டுகளாக உயர்கல்வித் தகுதிபெற்று, அதைப் பணிப்பதிவேட்டில் பதிவு செய்து ஊக்க ஊதிய உயர்வு பெற்று, பதவி உயர்வுக்கான தேர்ந்தோர் பட்டியலில் இடம்பெற்று வந்த பலரை சில வட்டாரக் கல்வி அலுவலர்கள் வேண்டுமென்றே துறை அனுமதி பெற்றதற்கான பதிவு பணிப்பதிவேட்டில் இல்லை என்று காரணம் கூறி, தேர்ந்தோர் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளனர். இதனால் பலரது பதவி உயர்வு பாதிக்கப்பட்டுள்ளது. பணிப்பதிவேட்டில் துறை அனுமதியைப் பதிவு செய்யவேண்டிய பொறுப்பு அலுவலகத்தைச் சார்ந்தது. எனவே, இதுபோன்ற சூழல்கள் ஏற்பட்டுள்ள ஒன்றியங்களில் பாதிக்கப் பட்டுள்ள ஆசிரியர்கள் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (தொடக்கக் கல்வி) மேல்முறையீடு செய்துள்ளனர். அவ்வாறான மேல்முறையீட்டு விண்ணப்பங்களை ஆய்வு செய்து உடனடியாக விடுபட்டவர்களின் பெயர்களைக் கலந்தாய்வுக்கு முன்பாகத் தேர்ந்தோர் பட்டியலில் சேர்த்திடத் தாங்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவிட பெரிதும் வேண்டுகிறோம்.

5. கடந்த முறை பொது மாறுதல் கலந்தாய்வு நடைபெற்ற போது EMIS இணையதளத்தில் ஏற்பட்ட பல்வேறு குளறுபடிகள் மற்றும் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக கலந்தாய்வு நிகழ்வைக் குறித்த நேரத்தில் நடத்த முடியாமலும், பல நாட்கள் கலந்தாய்வு நீண்டுகொண்டே போன நிலையும், நள்ளிரவு வரை கலந்தாய்வு நடந்த சூழலும், இதனால் பெண் ஆசிரியர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளான நிலையும் ஏற்பட்டது. எனவே, நடைபெற உள்ள கலந்தாய்வில், கடந்தகால நிகழ்வுகள் நடைபெறாத வண்ணம் தாங்கள் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு உதவிட வேண்டுகிறோம்.

தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் ஆசிரியர் நலன் சார்ந்த, மாணவர் நலன் சார்ந்த மேற்கண்ட கோரிக்கைகளைத் தாங்கள் கனிவுடன் பரிசீலித்து நிறைவேற்றித் தந்து உதவிட தங்களைப் பெரிதும் வேண்டுகிறோம்.

உண்மையுள்ள,

(ச. மயில்)
பொதுச்செயலாளர்

இடம்: சென்னை.
நாள் : 27.04.2023.

நகல்:

1. முதன்மைச் செயலாளர் ( பள்ளிக் கல்வித் துறை),
   தலைமைச் செயலகம்,
   சென்னை – 620 009.

2. பள்ளிக் கல்வி ஆணையர்,
   பள்ளிக் கல்வி ஆணையரகம்,
   கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.